மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கெங்கு இருக்கிறது, எவ்வளவு இருக்கிறது, என்கின்ற விவரங்கள் இப்பொழுது என்னிடத்தில் இல்லை. ஆனால் இருக்கின்ற கையிருப்பிலே உள்ளவை அரசுக்குச் சொந்தமான கிடங்குகளில் இருக்கிறது அல்லது அரசு வாடகைக்கு எடுத்து வைத்திருக்கின்ற தனியார் கிடங்குகளில் இருக்கிறது. அவ்வளவும் மிகவும் பத்திரமாக இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினரவர்களுக்கு அந்தக் கவலை இருக்க வேண்டிய அவசியம் இல்லை.

தூத்துக்குடியில் முத்துக்குளிப்ப.

*வினா எண். 107 திரு. யா. சை. மு. யூசுப்: மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா :

(அ) தூத்துக்குடியில் முத்துக்குளிப்பு எடுக்கப்பட்ட முத்துக்கள் எப்போது கடைசியாக ஏலத்திற்கு விடப்பட்டது?

(ஆ) எத்தனை ஆண்டுகளுக்கொரு முறை ஏலம் விடப் படுகின்றது?

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்: (அ) தூத்துக்குடி கடலில் எடுக்கப்பட்ட முத்து சிப்பிகள் கடைசியாக 1961 ஆம் ஆண்டில் ஏலம் விடப்பட்டன.

(ஆ) முத்துச்சிப்பிகள் குளிக்கப்பெற்று, கரைக்குக் கொண்டு வரப்பட்டதும் உடனுக்குடன் ஏலம் விடப்படும்.

திரு. ரா. கு. பெருமாள்: மாண்புமிகு பேரவைத் தலைவா அவர்களே, தூத்துக்குடி கடற்கரையில் முத்துக் குளிப்பது என்பது தமிழ்நாட்டிலே மட்டுமல்ல, இந்தியாவிலேயே மிகச் சிறந்த இடமாகும். இந்த ஆண்டோ அல்லது அடுத்த ஆண்டோ இந்த முத்துச் சிப்பிகள் ஏலத்தில் விடப்படும்பொழுது கார்ப்பரேஷன் மூலம் கொடுக்கப் போகிறார்களா அல்லது அரசுத் துறை மூலம் தனியாகக் கொடுக்கிறார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்: பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டோ அல்லது அதற்கு முந்தைய ஆண்டோ அல்லது அதற்கு அடுத்த ஆண்டோ ஏலம் விடுவதற்கான சாத்தியக் கூறுகள் இல்லை. காரணம் இப்பொழுது இருக்கின்ற சிப்பிகள் முத்துக்கள் முதிர்ச்சி பெறவில்லை என்பதை ஆராய்ச்சி யாளர்கள் தெரிவித்திருக்கிறார்கள்.

திரு. துரை கலியமூர்த்தி; தலைவரவர்களே, இந்த முத்துச் சிப்பிகள் கடைசியாக 1961–ஆம் ஆண்டில் ஏலம் விடப்பட்டன என்று அமைச்சரவர்கள் கூறினார்கள். அடுத்த கேள்விக்கு உடனுக்குடன் ஏலம் விடப்படுவதாகவும் சொன்னார்கள். அப்படியானால் அதற்குப் பிறகு ஏலம் விடப்படவில்லையா ? எவ்வளவு ஏலம் விடப்பட்டது என்பதை அறிய விரும்புகிறேன்.

1979 நவம்பர் 5]

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, முத்து என்பது சிப்பியிலேயிருந்து எடுக்கப்படுவது. கடலிலே கிடைக்கும் சிப்பியெல்லாம், அது கிடைக்கின்ற நேரத்திலே ஏலம் விடப்படும். 1961 ஆம் ஆண்டுக்குப் பிறகு முத்துக் குளிப்பு தமிழகத்திலே நடைபெறவில்லை.

## நூல்கள் மொழிபெயர்ப்பு.

*வினா எண் 108 திரு. கோ. இளங்கோவன் : மாண்புமிகு கல்வித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) பிறமொழி நூல்களைத் தமிழாக்கம் செய்வதற்கும் சிறந்த நூல்களை பிறமொழியாக்கம் செய்வதற்கும் குழுவொன்று அமைக்கப்பட்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில் அதன் உறுப்பினர்கள் யாவர்?

திரு. ஆ. வெள்ளைச்சாமி (அமைச்சரின் பேரவைச் செயலர்).

(அ) ஆம்.

(ஆ) திரு. எஸ். மகாராஜன், (ஆட்சிமொழி சட்ட சொல்லாக்க ஆணைக் குழுத்தலைவர்)— தலைவர்.

திரு. கே. எஸ். மகாதேவன், தமிழ் வளர்ச்சி இயக்குநர், உறுப்பினர்—செயலர்

உறுப்பினர்கள்.

டாக்டர் எஸ். வி. சுப்பிரமணியன், உலகத் தமிழாராய்ச்சி நிறுவன இயக்குநர்.

டாக்டர் சி. பாலசுப்பிரமணியன், தமிழ்த் துறைத் தலைவர், சென்னை பல்கலைக் கழகம்.

டாக்டர் சி. ஆர். சர்மா, மண்டல செயலர், சாகித்ய அகடமி, சென்னை.

திரு. கோ. இளங்கோவன் : பேரவைத் தலைவரவர்களே, இந்தக் குழுவிலே இருப்பவர்கள், வேறு பொறுப்புக்களிலே இருப்பதால் மொழியாக்க வேலை மெத்தனமாக நடைபெறுவதாகச் சொல்லப்படுகிறது. அது பற்றி அரசு அறியுமா? அரசு என்ன நடவடிக்கை எடுக்கப் போகிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

திரு. ஆ. வெள்ளைச்சாமி (அமைச்சரின் பேரவை செயலர்) : பேரவைத் தலைவரவர்களே, மொழியாக்க வேலை குறித்த அரசாணைக்கு திருத்தம் செய்திருப்பதால் சிறிது தேக்கம் இருக்கிறது. அது விரைவிலே நிவர்த்தி செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS